## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு
## எந்த குழந்தையும் நல்ல குழந்தை தான்!

---

எப்போதும் பெற்றோர்களும் பெரியவர்களும் ஆசிரியர்களும் குழந்தைகளை இம்சித்தும் குறைகூறிக் கொண்டும் ஒப்பிட்டுக் கொண்டும் இருப்பது நல்லதே அல்ல. ஒவ்வொரு குழந்தையும் இந்த உலகிற்கு ஏதோ ஒரு வழியில் தேவை!

**சத்ய வ்ரதன்** தன் பெற்றோருக்கு ஒரே மகன். அவன் அப்பா **அருணன்**. இஷ்வாகு குலத்தின் [ஸ்ரீராமனின் குலம்] மிகப் பெரிய நல்ல மஹாராஜா. ஆனால் எப்போதும் தன் மகனைக் குறை கூறும் புத்தி கொண்டவர். இதனால் மகனுக்குச் சின்ன வயதிலேயே பெற்றோர் மீது வெறுப்பு வருகிறது. வேண்டும் என்றே ஏதாவது செய்து வம்பைக் கொண்டும் வருவான்.

சத்யன் வாலிபன் ஆனான். இளவரசன் ஆனான். மிகப் பொறுப்புடன் நாட்டை அடுத்து எப்படி ஆள்வது என்று அவன் எடுத்தவுடனே தன் அளவுக்கு உணர வேண்டும் என்று அருணன் ஆசைப்பட்டு அதற்காக அவனை சதா நச்சரித்து உயர்ந்த அரசியல் கல்வியைத் திணித்தான். மகனோ தவித்தான்! காலம் செல்கிறது...

பக்கத்து நாட்டில் நடந்த ஒரு உறவினரின் கல்யாணத்துக்கு அருணன் சத்யனை அனுப்பினான். சென்ற இடத்தில் கல்யாணப் பெண்ணை ஒரு கெட்ட அரசனுக்குக் கல்யாணம் செய்து வைக்கப் போவதாக அவனுக்குத் தெரிந்தது. அது அநியாயம், அதிலும் மாப்பிள்ளைத் தன்னுடன் குருகுலத்தில் படித்தவன், அவன் ஒரு கெட்ட நடத்தை கொண்டவன் என்று உணர்ந்த சத்ய வ்ரதன் யாரும் எதிர்பாராத வகையில் கல்யாணப் பெண்ணுக்கு உண்மையை எடுத்துக் கூறி அவள் சம்மதத்துடன் அவ்விடத்தை விட்டு அவளைத் தேரில் அழைத்துச் சென்று கல்யாணம் செய்து கொண்டான்.தம்பதிகள் அருணனைக் காண வந்தனர்.

தன் பேருக்கு அவமரியாதை தேடித் தந்த மகனையும் அதற்குத் துணை போன அப்பெண்ணையும் வெறுத்து ஒதுக்கி நாட்டை விட்டே வெளியேற்றி விட்டான் அருணன்.

இவர்களுக்குக் குலகுரு யார் தெரியுமா? **வசிஷ்டர்.** அவர் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் அரசன் அன்று முதல் இன்று வரை தன் மகனைக் குறை கூறும் குணத்தை மாற்றிக் கொள்ளவே இல்லை. என்ன செய்வது?

**"மன்னா! சதா நம் பிள்ளைகளைக் குறை கூறுவது நல்லதே இல்லை! ஒரு நாள் சத்யன் உன் பேரையும் புகழையும் காப்பான் பார், அவன் என் மாணவன்! எனக்கு அவனைப் பற்றித் தெரியும்" என்றார் குரு.**

தன் குருவான வசிஷ்டர் கூட எடுத்துச் சொல்லியும் தன் பெற்றோர் தன்னை ஏற்றுக் கொள்ளவில்லையே என்று சத்யன் மனவருத்தத்துடன் கால் போன போக்கில் தன் மனைவியுடன் சென்று விடுகிறான். காலம் செல்கிறது...

சிறிது காலத்தில் அரசனும் நாட்டை மந்த்ரியிடம் தருகிறான், காட்டுக்குள் முனிவர்களின் ஆஸ்ரமத்துக்குச் சென்றுவிடுகிறான் ராணியுடன்.

என்ன பாவம் செய்தாரோ? அருணன் காட்டுக்குச் சென்ற பின் நாட்டில் பருவ மழை பெய்யவே இல்லை. மக்களும் ஜீவன்களும் கொடுமைக்கு உள் ஆயினர்.என்ன செய்வது? குருவிடம் மீள வழி கேட்டனர் மக்கள்.

**" மக்களே! சத்ய வ்ரதன் இப்போது விச்வாமித்ர மஹரிஷியிடம் சேர்ந்து வாழ்கிறான். அவனுடைய மன பலமும் ஜீவ பலமும் பக்தியும் அதீத அளவில் அதிகரித்து உள்ளன. விச்வாமித்ரர் கஷ்டப்பட்ட போது காட்டில் சத்யனும் அவன் மனைவியும் விறகு வெட்டிப் சம்பாதித்து ரிஷியைக் காத்தனர். அந்த மஹாபுண்யத்தால் அவன் பல வரங்களையும் பெற்று இருக்கிறான். அவனுக்கு அவரும் மிக உன்னதமான வருண மூல ஜெபம் கற்றுத் தந்துள்ளார். அவனை மீண்டும் ஊருக்குள் அழைத்து வர மழை பெய்யும்"** என்றார் வசிஷ்டர்.

வசிஷ்டரின் சொல்படி மக்களும் விச்வாமித்ரரின் ஆஸ்ரமம் சென்று அவர் அனுமதியுடன் சத்யனையும் மனைவியையும் ஊருக்குள் அழைக்க, அவன் நாட்டை ஆளும் பேராசை இல்லாமல், மக்களின் நலன் வேண்டி மிக ஸ்ரத்தையுடன் வருண ஜெபம் செய்ய மழை கொட்டியது!

அவனது இச்செயல் அருணனுக்கு எட்டியது. தன் மகனின் உன்னத குணங்களை அப்போதாவது உணர்ந்தான். ஊருக்குள் வந்து மீண்டும் ஆஸ்ரமம் செல்ல எண்ணி இருந்த சத்யனுக்கு அரசனாக முடிசூட்ட எண்ணினான். அவனோ விச்வாமித்ரரின் ஆசீர்வாதத்துடனும் அனுமதியுடனும் மன்னன் ஆகி நாட்டை அற்புதமாக ஆண்டான். அவன் பல புண்ணியங்களைச் செய்ததன் பலனாக ஓர் அற்புத மகனைப் பெற்றான். அவன் யார் தெரியுமா?

**அரிச்சந்த்ரன்!**

[பெற்றோர்களின் புண்ணியமும் பக்தியும் நற்குணங்களும் ஒரு நாளும் வீண் போகாது. அவையே அடுத்த தலைமுறைக்கு அடித்தலம் என்று உணருங்கள்!]